அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.*

முற்பகல் 11-45

***திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் காவேரி குடிநீர் வழங்கப்படாதது குறித்தும், மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் காவேரி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் வேடசந்தூர், பாளையம், கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் ஆகிய பேரூராட்சிகள், ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் 739 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் கரூர் மாவட்டத்தில் 25 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கான வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்*

38 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் 12-1-2006 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி செயல்படுத்தப்பட்டது. வேடசந்தூர் பிரதான திட்டத்திற்கான பணி ஆணை 28-8-2006 அன்று வழங்கப்பட்டு, சுமார் 3 வருட காலத்தில் 40 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்ததால், 18-9-2009 அன்று பணி ஆணை இரத்து செய்யப்பட்டு, பின்னர், மீதமுள்ள பணிகள் 8 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன. 27-3-2013 அன்று சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டது. தற்போது வேடசந்தூர் பிரதான திட்டத்தின் பயனாளிகளான வேடசந்தூர், கன்னிவாடி, பாளையம் மற்றும் ஸ்ரீராமபுரம் பேரூராட்சிகளிலுள்ள 50,556 மக்களுக்கு, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதமும், ஒட்டன்சத்திரம் நகராட்சியிலுள்ள 32 ஆயிரம் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 65 லிட்டர் வீதமும் 5 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 1-8-2014 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ளது. வேடசந்தூர் பிரதான திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த குடிநீர் ஒதுக்கீட்டினை நீராதாரமாகக் கொண்டு, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஒட்டன்சத்திரம், குஜிலியம்பாறை, வேடசந்தூர், ரெட்டியார் சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 739 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும்வகையில், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த 101 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 109 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம், ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 201 குடியிருப்புகளுக்கு 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம், வேடசந்தூர், குஜிலியம்பாறை மற்றும் ஒட்டன்சத்திரம் ஒன்றியங்களைச் சேர்ந்த 235 குடியிருப்புகளுக்கு 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 93 குடியிருப்புகளுக்கு 9 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய 5 பிரிவு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. இந்த 5 பிரிவு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 2008 ஆம் ஆண்டு

85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டிருந்தாலும், பிரதான திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலதாமதத்தால், நிலை-2, அதாவது, Phase-II-ல் உள்ள 5 பிரிவு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்குமே சோதனை ஓட்டம் நடத்த இயலவில்லை. 5 பிரிவு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்கீழ் 2007-2008-ல் பதிக்கப்பட்ட குழாய்கள், சாலை விரிவாக்கம், தொலைத் தொடர்புத் துறை, ஊரக வளர்ச்சித் துறை பணிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட பல்வேறு கட்டமைப்புகளின் காரணமாக ஆங்காங்கே சேதமுற்ற நிலையில் கண்டறியப்பட்டன. இத்திட்டத்தை பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காக, 5 கோடியே 49 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பணி ஆணை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2014, அக்டோபரில் வழங்கப்பட்டது. 5 பிரிவு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், 3 பிரிவு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன. மொத்தமுள்ள 739 குடியிருப்புகளில், இதுவரை 594 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கடைக்கோடி 145 ஊரகக் குடியிருப்புகளுக்கு நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து கூடுதல் குடிநீர் பெற வழிவகை செய்யப்பட்டு, சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இதுகுறித்து மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களும் அதிகமான நேரங்களில் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல், பழனி சட்டமன்ற உறுப்பினர் உட்பட சிலரும் கேட்டிருக்கிறார்கள். இதில் தனிக் கவனம் செலுத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். இப்பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, 31-8-2018-க்குள் நிறைவேற்றி, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், ஏற்கெனவே அமைக்கப்பட்ட பழைய A.C. pipes எல்லாம் மிகவும் damage ஆகியிருக்கின்றன. முக்கியமாக அந்த pipes-ஐ எல்லாம் மாற்றக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூடிய விரைவிலே அதாவது, 31-8-2018-க்குள் இந்தத் திட்டம் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக 2006 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஆத்தூர் தொகுதி, ரெட்டியார்சத்திரத்தில் 201 கிராமங்கள் எடுக்கப்பட்டன. இந்தத் திட்டம், 2006 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இப்போது 2018 ஆம் ஆண்டு நடைபெறுகிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, என்னுடைய தொகுதி வழியாகத்தான் அந்த main pipe line தண்ணீர் ஒட்டன்சத்திரத்திற்குப் போகிறது. அந்தப் pipe line அருகில் சாலையோரம் இருக்கக்கூடிய ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திலுள்ள 201 கிராமங்களுக்கும் இதுவரை தண்ணீர் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் மொத்தம் 262 கிராமங்கள் இருக்கின்றன. அதேமாதிரி, ஆத்தூர் ஒன்றியத்தில் 255 கிராமங்கள் இருக்கின்றன. இந்த 201 கிராமங்களுக்கு தண்ணீர் வரவில்லை. பல முறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புகார் அளித்துள்ளேன். ஏறத்தாழ 100 முறை நான் பேசியிருப்பேன். இதுவரையிலும் அந்த 201 கிராமங்களுக்கு ஒரு துளி தண்ணீர்கூட வழங்கப்படவேயில்லை.

இரண்டாவது என்னவென்று கேட்டீர்களென்றால், மீதியிருக்கிற 61 கிராமங்களில் 38 கிராமங்களை புதிய நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கான வேலைகளே தொடங்கப்படவில்லை. ஆத்தூர் ஊராட்சியைப் பொறுத்த அளவில் 255 கிராமங்களில் 152 கிராமங்கள் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த 152 கிராமங்களுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, ஒரு கேள்வி கேளுங்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். அடுத்தது, இன்னொரு கேள்வி கேளுங்கள். இதுதான் சிறப்புக் கவன ஈர்ப்பு. நீங்கள் lengthy ஆகப் பேசிக்கொண்டு போனீர்கள் என்றால், இப்போது எனக்கு நேரமில்லை. ஒத்துழைப்புக் கொடுங்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் ஒன்றியத்தில் 255 கிராமங்களில் 152

2018 ஜூலை 3] [திரு. இ. பெரியசாமி]

கிராமங்கள் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எடுக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு 6 மாதங்கள் ஆகிவிட்டன. இதன் பின்னர் எடுக்கப்பட்ட 500 கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், நான் கடந்த 5 மாதகாலமாக கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அந்த 152 கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுத்தால், அங்கே sump இருக்கிறது, உடனே தண்ணீர் ஏற்றிவிடலாம், அது ஒன்று.

இரண்டாவது, மீதியிருக்கின்ற 103 கிராமங்களில் அய்யன்கோட்டை, பஞ்சம்பட்டி, அக்கரைப்பட்டி, சீவல்சரகு ஆகிய நான்கு கிராமங்களும் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படாமல் முழுமையாக விடுபட்டிருக்கின்றன. இந்த நான்கு கிராமங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதுபோக, மீதியிருக்கக்கூடிய கிராமங்கள் அனைத்திலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எல்லா இடங்களிலும் ஏற்கெனவே நான் 9 sumps அமைத்திருக்கிறேன். அந்த sumps இணைப்புக் கொடுத்தாலே மீதியிருக்கின்ற அந்தக் கிராமங்களுக்கு தண்ணீர் போய்விடும். இந்த நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில். அரசுக்கு நிதிச் சுமையே கிடையாது. ஆனால், முதலில் 255 கிராமங்களையும் எடுத்துக்கொள்கிறோம் என்று அறிவித்திருந்தார்கள். அதில் 103 கிராமங்கள் விடுபட்டுப்போயின. உள்ளூர் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை ஆதாரங்களாக வைத்து, அதிகாரிகள் இக்கிராமங்களை விட்டுவிட்டார்கள்.

இது தவிர, இப்போது திண்டுக்கல்லுக்கு ஆத்தூர் காமராஜர் சாலை அருகில் இருந்து தண்ணீர் போகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, இதற்குப் பதிலாக நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசியிருந்தால் எனக்கு சிரமம் இல்லாமல் இருந்திருக்கும். நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் கேள்வி கேட்க மாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் lengthy ஆகப் பேசிக்கொண்டே போகிறீர்கள். நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் மூத்த உறுப்பினர். விவரம் தெரியாமல் இருந்தால் நான் ஏதாவது சொல்லலாம். தெரிந்தே நீங்கள் பேசுகிறீர்கள், நான் என்ன சொல்வது? உரையை முடியுங்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் ஊராட்சியிலிருந்து தண்ணீர் வருகிறது. வழியோரக் கிராமங்கள் ஏற்கெனவே அந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது, ஆத்தூருக்கு தண்ணீர் வருவதில்லை. குறிப்பாக, வரிசையாக இருக்கக்கூடிய வழியோரக் கிராமங்களில் தண்ணீர் இல்லை. தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் பொன்மாந்துறை கிராமம் முழுவதுமாக பாதிக்கப்பட்டு, அப்பகுதியில் தண்ணீர் குடிக்க முடியாத நிலையில் இருக்கிறது. மாநகராட்சியின் மூலமாக தண்ணீர் கொடுங்கள் என்று இப்போது தீர்மானம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், தண்ணீர் கொடுக்கப்படவில்லை. வழியோரக் கிராமங்களான அனுமந்தராயன் கோட்டை, பஞ்சம்பட்டி அதேமாதிரி பொன்மாந்துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர், அதற்கு பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11-55

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். முழுமையாகத் தெரியும். இந்தத் திட்டம் main திட்டம். 2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை எடுத்து, நீங்கள்தான் first work order கொடுத்தீர்கள். அதை cancel செய்து 2009-ல்தான் re-tender வந்தது. 5 கிளைத் திட்டங்கள் முடித்த பிறகும்கூட அந்த main திட்டத்தை முடிக்க முடியவில்லை, அதனால்தான் பிரச்சினையே வந்தது. அதுதான், அந்த tender இரத்து செய்யப்பட்டு, re-tender வந்ததற்குக் காரணமாகும். அது உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் நடந்திருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 5 கோடியே 49 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அக்டோபர் மாதம் 2014-ல் அரசாணை வழங்கப்பட்டு, அப்பணி வேகமாக முடிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் பணி எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல பல்வேறு கிராமங்களில் sumps எல்லாம் கட்டப்பட்டிருப்பதாக சொன்னார்கள். அதற்கும் பைப் லைன் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவையெல்லாம்

2018 ஜூலை 3] [திரு. எஸ்.பி. வேலுமணி]

ஆய்வு செய்யப்பட்டு, இதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். உங்களது கட்சி கொறடா அவர்களும், இதைப்பற்றி தொடர்ந்து, மூன்று, நான்கு முறை பேசியிருக்கிறார்கள். இதுகுறித்து, நீங்களும் பேசியிருக்கிறீர்கள். இது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதில் தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து, துறை அதிகாரிகளுடன் தனியாக கூட்டமே நடத்தியிருக்கிறோம். இதற்கு 31-8-2018 வரையில் கால அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குள், இப்பணிகளெல்லாம் கண்டிப்பாக, விரைந்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, இன்னொரு கேள்வியைச் சீக்கிரமாகக் கேளுங்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். பெரிய பொன்மாந்துறை, சின்ன பொன்மாந்துறை ஆகியவை பொன்மாந்துறையில் அமைந்துள்ள பகுதிகளாகும். ஒரே ஊரில் ஒரு வீதி சின்ன பொன்மாந்துறை, ஒரு வீதி பெரிய பொன்மாந்துறை. அதன் எதிர் பகுதி திண்டுக்கல் தொகுதியில் வருகிறது. திண்டுக்கல் தொகுதியில் அந்த வீட்டின் முன்னால் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். அந்த வீட்டிற்கு எதிர்த்த வீட்டிற்கு தண்ணீர் வரவில்லை. பத்து அடி தூரம்தான் வித்தியாசம். அதுகுறித்து, நான் ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னேன். இப்போது, மாநகராட்சியில் தீர்மானம்கூட போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வீதியில் மொத்தமே 50 வீடுகள்தான் இருக்கின்றன. ஒரு பைப் லைன் இணைப்பு கொடுத்தால் அவர்கள் பயன்பெறுவர். பெரிய பொன்மாந்துறை, சின்ன பொன்மாந்துறை, அனுமந்தராயன்கோட்டை போன்ற ஆத்தூர் தொகுதியின் வழிவரும் கிராமங்களுக்கு புதிய பைப் லைன் அமைத்து, திண்டுக்கல்லுக்கு வருகின்ற பைப்லைனிலிருந்து தண்ணீர் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா? அதேபோன்று, ரெட்டியார்சத்திரத்தில் தண்ணீரே இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்காக ஐந்து வருடங்களில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு

[திரு. இ. பெரியசாமி] [2018 ஜூலை 3

நிதியிலிருந்து நான் 9 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறேன். தயவுசெய்து, ரெட்டியார்சத்திரத்திற்கு முழுமையாக தண்ணீர் கொடுப்பதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதையும், இப்பணிகளை எப்போது செய்து முடிப்பார்கள் என்பதையும் நான் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து கிளைத் திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், ரெட்டியார்சத்திரத்திலுள்ள 201 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம்”